
விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்...

இன்ப

அழகிய ஆரம்பம்...

indhrumail@gmail.com
70940 53241
மாதமிருமுறை
01-15 ஏப்ரல் 2025
12-ம் இதழ்

ஏ இதழ்



உன் மீது பட்ட பிறகு தான்
புனிதமாகி போனது
அந்த பாவப்பட்ட மழை...

லி .நௌஷாத் கான்
கும்பகோணம்

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

indhrumail@gmail.com

70940 53241

அனைவருக்கும் வணக்கம்.

சென்ற இதழின் படைப்புகளை பலரும் பாராட்டினர். பாராட்டு ஒன்றே சிற்றிதழ்களை வளர்க்கும். வணிக ரீதியில் எந்த பின்பலமும் இல்லாமல் ஆர்வம் ஒன்றையே முதலீடாக வைத்துக்கொண்டு இதழ் நடத்துவதற்கு அதிக பொறுமை வேண்டும். **இனி இன்று இதழ் மாதமிருமுறை இதழாக வெளியாகும்.**

இருப்பினும் நமது இதழில் எழுத்தாளர்கள் கொடுக்கும் படைப்புகள் இதழை செவ்வனே நடத்துவதற்கு பெரிதும் துணைபுரிகின்றன. அவர்களுக்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றி...

படிக்கும் வாசகர்கள் இன்று இதழுக்கு விளம்பரங்கள் பெற்றுத்தர உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்

ஆசிரியர்

இன்று ஈ பதிப்பு - 29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை வெளியிடுபவர், ஆசிரியர். வெ.கோபிநாத்

Su	M	Tu	We	Th	Fr	Sa
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30	April 2025		

இணையவழி மோசடிக்கு பலியாகாதீர்கள்
அழையுங்கள்
1930
புகார்களை பதிவு செய்ய
www.cybercrime.gov.in

இன்று ஈ இதழ் இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

indhrumail@gmail.com

70940 53241



இன்று ஈ இதழ் இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp



மூன்று குரங்குகள்
வாய்ப்பொத்தி கண்மூடி செவிமூடி
இருந்த காலம் மாறியாச்சு

எப்.எம் பாட்டு கேட்கும் குரங்கு
மூகமூடி அணிந்த ஒன்று
ஆடம்பர கண்ணாடி

ஆக நாங்களும் மாறி விட்டோம்

பாரதிராஜன் என்கிற ரங்கராஜன்
சென்னை அம்பத்தூரிலிருந்து.

தலா ரூ.100 பரிசு பெறுகிறது

தீயவர்



புலனத்தைப் பார்க்காதீர்கள்
அதிலிருப்பதைக் கேட்காதீர்கள்
அதைப் பற்றியே பேசாதீர்கள்
ஏனெனில் -
மனிதர்களைப் போல....
நீங்களும்(கூட) தீயவர்களாகி விடுவீர்கள்

முத்து ஆனந்த் வேலூர்

பார்த்தும்...பார்க்காமலும்
கேட்டும்...கேட்காமலும்
பேச தெரிந்தும்..
பேச தெரியாமலும்
வாழ்ந்திடும்..உலகமாய்
நாம் மாறினால்
இன்னும் சில காலம்
நமக்காக..நாம் வாழலாம்.



திருச்சிற்றம்பலம் சுரேஷ்

அழகிய ஆரம்பம்...
இன்று எ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

டார்லிங் ஐ லவ் யு கதைகள்



முத்து ஆனந்த் வேலூர்
செல் : 7010482479

பிரேக் அப்

"மிருதுளாவை "பிரேக் அப்" செஞ்ச மிதுனுக்கு உடனே "ஐ லவ் யூ டார்லிங்" என்று "மெசேஜ்" அனுப்பினாள் மஞ்சுளா

லவ்

தான் "சாமி" கும்பிடாவிட்டாலும் தனது "டார்லிங்"குக்காக எல்லாக் "கோயில்களுக்கும்" அவளுடன் சென்றான் பிரபு

பரிசு

தன் "கவிதை"ப் புத்தகத்தைப் "பரிசளித்து" புவனாவிடம் தன் "காதலைச் சொன்னான்" சித்தார்த்

தியாகம்

தன் தங்கை "தன் காதலனைக் காதலிக்கிறாள்" என்று தெரிந்ததும் அவனுக்குப் "பிரேக் அப்" சொன்னாள் சித்ரா

முடிவு

காதலில் தோற்றுப் போனதும் உடனடியாக தன் சொத்துகளை "முதியோர் காப்பகங்களுக்கும் அனாதை இல்லங்களுக்கும்" எழுதி வைத்தான் முரளி

அடுத்த இதழில் முத்து ஆனந்த்-ன்

பிரேக் அப் கதைகள்

இன்று எ இதழ் | இன்று எ இதழ் | 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

கவிதை

பெண்ணிவளோ...



பெண்ணின் மனதாழம்
பெருங்கடலை மிஞ்சிவிடும்
எண்ணம் வான்பரப்பை எட்டிவிடும்
மண்ணுலகை
வானும் கடலும் வளமாக்கும்
பெண்மகளோ
ஞாலம் உயிரிப்பிக்கும் நாற்று

குடந்தை பரிபூரணன்.

ஆசை

ஆசையாய்
அவள் பாதங்களை
கட்டிக்கொண்டது கொலுசு

-சு.மூன்சுதாகரன்,
வானவன்மகாதேவி.





வீட்டின் மூலையில்
தனிமையில் பொம்மை
காத்திருக்கிறது..

தன்னுடன் விளையாட
குழந்தை வரும் என்று..

-சென்னா, அரூர்



நீ
வெட்கப்படும்
போதெல்லாம்
உன்
கால்
கட்டைவிரல்கள்
ஏன்
ஓவியம்
வரைகின்றன...

நம்.திரு.ர அம்ஏச்

இன்று ஈ இதழ் இன்று ஈ பதிப்பு இன்று ஈ இதழ் 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

ஜோக்ஸ்

டாஸ்மார்க்..கடையில்
என்ன புதிதாக போர்டு..?

இங்கு..எளிய முறையில்
ஆங்கிலம்
கற்றுத்தரப்படும்..அறிவிப்பு .

திருச்சிற்றம்பலம் சுரேஷ்





”என் வீட்டுக்காரர்
ரொம்ப நல்லவருடி”

”எத வச்சு அப்படி
சொல்றடி?”

”நான் நின்னுக்கிட்டே
சுடறேன்னு
“எட்டு தோசை“யோடப்
போதும்ன்னு சொல்லிடுவாரு”

முத்து ஆனந்த் வேலூர்

எங்க கடையில் கட்டிங்
பண்ணினா
சேவிங் இலவசம்

இது என்ன பிரமாதம்
எங்க பைனான்ஸ்
கடையில் சேவிங்ஸ்
பண்ணினா
மொட்டை இலவசம்

நடேஷ் கன்னா,
கல்லிடைக்குறிச்சி



இன்று இதழை உங்கள்
நண்பருக்கும் அறிமுகப்படுத்துங்கள்

இன்று ஈ இதழ் இன்று ஈ பதிப்பு இன்று ஈ இதழ் 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

ஒரு நிமிடக் கதை

ஏப்ரல்-1

7 வருட காதலை முதன் முதலாய்
தைரியத்துடன் ஏப்ரல் 1 - ஆம் தேதி
பிரியாவிடம் சொன்னான் முரளி ...
அவள் தவறாக நினைத்தால் ஏப்ரல் பூல்
என்று சொல்லி சமாளித்து விடலாம்
என்ற நம்பிக்கையில்

நௌஷாத் கான் .லி
அபுதாபி

மினிகதை:

பைபாஸ்

மலர்மதி



”பைபாஸ் சாலை”
அமைப்பதில் ஏகப்பட்டப்
பணத்தைக் கொள்ளை
அடித்தார் காண்டிராக்டர் கருணாகரன்.
திடீரென அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டது.
தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்ட அவரை
டாக்டர்கள் பரிசோதித்தனர்.
“உடனடியாக “பைபாஸ்ஆபரேஷன்” செய்ய
வேண்டும். இல்லையேல், உயிருக்கேஆபத்து”
என எச்சரித்தார் டாக்டர்.



இன்று ஈ இதழ் இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp


அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

காதல் டயலாக்

"டார்லிங், இப்பல்லாம் நீங்க நிறைய "கதை, கவிதை" எழுதறிங்க போல இருக்கு"

"ஆமா, டியர்"

"சரிடா, அதெல்லாம் கார்டா? மெயிலா?"



சத்யா பிரியன்

சேர்த்து படித்திடு

சில நேரங்களில் ..சிலரிடம் பேசாமல் இருந்திடு..
கேட்காமல் இருந்திடு..
பார்க்காமல் இருந்திடு..
இன்றைய மக்களிடம்
நீ கற்க வேண்டியது
படிக்கும் பாடத்துடன்
அனுபவத்தை கற்றிடு.

திருச்சிற்றம்பலம் சுரேஷ்

எல்லாவற்றையும்
காதுகொடுத்து கேட்காமல்...

எல்லாவற்றையும்
பேசிக்கொண்டு இருக்காமல்...

எல்லாவற்றையும்
பார்த்துக்கொண்டு இருக்காமல்...

இருந்தால் வாழ்வு சிறக்கும்.

சூர்யா, சென்னை

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

கவிதை



சசிகலா திருமால்
கீழப்பழுவூர்

நீரருந்தியும் கசிகிறது பசி
ஏழையின் வயிற்றில்
ஈரத்துணி..

ஆதி அந்தம்
தேடி அலைந்தும்
அகப்படாத கடவுளெனவே
காதல்..

என் நினைவிலிருந்து
சற்றே தள்ளிதானிரேன் நீ...
நானாவது நிம்மதியாய்
இருந்துவிட்டு போகிறேன்...

இன்று ஊரடங்கு உத்தரவு
என்கிறாய் நீ..
என்றோ நான்
உன்னில் அடங்கியதை
அறியாமல்....

நின் மீதான
கோபங்களும் தாபங்களும்
பேரன்பின் விளிம்பில் பிழைத்தே
இன்னமும்
உயிர் சுமந்துக் கொண்டிருக்கிறது
நம் காதல்...

விழிகளால் வலை விரிக்கிறாய் நீ
உன் போதை பார்வையில்
மோதி விழுகிறேன் நான்....

முகவர்கள் தேவை

- நீங்கள் LIC, Post Office முகவரா?
- தாலுக்காவிற்கு ஒருவருக்கு மட்டுமே முகவர் வாய்ப்பு...
- பகுதி நேரமாக வேறு வேலை தேடுபவரா?
- ஊரில் அதிகம் நண்பர்களை கொண்டுள்ளீர்களா?
- உங்கள் விபரங்களை 7094053241 என்ற எண்ணுக்கு உங்கள் சுய விபரங்களை அனுப்புங்கள்...



இன்று ஈ இதழ் இன்று ஈ பதிப்பு இன்று ஈ இதழ் 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp



நேரம்

- நேரம் ஒரு அள்ள அள்ள குறையாத தங்கச் சுரங்கம்.
- அதன் அருமையை உணர்ந்தவர்கள் தங்கள் வாழ்க்கைக்கு சாதகமாக பயன்படுத்தி வாழ்வில் வளம் காண்கின்றனர்.
- அதனை உதாசீனப்படுத்துபவர்கள் நேரம் போதவில்லை என புலம்பி பல இன்னல்களை சந்திக்கின்றனர்.
- நேரத்தை மதித்தால் அது நம்மை மதிக்கும்.
- நல்ல நேரம் கெட்ட நேரம் என்றெல்லாம் எதுவும் இல்லை. அனைத்து நேரமும் நல்ல நேரமே...
- நேரத்தை ஒருவர் சரியாக பயன்படுத்தினால் சமூகம் அவருக்கு அதிர்ஷ்டம் உள்ளது, கொடுத்து வைத்தவர் என்றெல்லாம் புகழும். அதற்கு அந்த நேரத்தை மதிக்க வேண்டும்.

தி.ரேவதி

விளம்பர உலகில்...

- உங்கள் தாலுக்காவில் நீங்கள் ஒருவர் தான் விளம்பரதாரர்...

- உங்கள் வாடிக்கையாளர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்க...

- நல்ல விசயங்களை பகிர...

- உங்கள் Offer - களை உடனுக்குடன் தெரிவிக்க...

- தினசரி ஸ்டேட்டஸ்...
மினி வீடியோ விளம்பரங்கள்

- 24 மணி நேரமும் செயல்படும் உங்கள் விளம்பரம்...

- சூப்பர் மார்க்கெட், நகைக்கடை ஜவுளிக்கடை நடத்துபவர்கள் மட்டும் **7094053241** என்ற எண்ணுக்கு உங்கள் விபரத்தை வாட்சப்பில் அனுப்பவும்

- சேர்ந்து கலக்குவோம்...

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

மைக்ரோ கதை

கொடூர நாய்க்கடி...



-சு.மூன்சுதாகரன்,
வானவன்மகாதேவி.

மூச்சிரைக்க ஓடிவந்து
வீட்டுக்குள் நுழைந்த
பக்கத்து வீட்டுப் பரிமளத்தைப்
பார்த்த கோமதி

"என்னாச்சுக்கா...
இவ்வளோ பதட்டமா
ஓடி வர்றீங்க?"

"ஸ்கூலுக்குப் போயிட்டு வர்றப்ப
உன் மகனைத் தெரு நாய்ங்கயெல்லாம்
சேர்ந்து கடிச்சிட்டு..."
அங்கிருந்தவங்க உடனே ஆம்புலன்ஸ்ல
பெரிய ஆஸ்பத்திரிக்கு அழைச்சிட்டு
போயிருக்காங்க...

"என்னக்கா சொல்றே"

பதட்டத்துடன் விரைவாகப்
பெரிய ஆஸ்பத்திரிக்குள் இருவரும் நுழைய..
"ஐசியு" வார்டிலிருந்து டாக்டர் வெளியே வர...

"என்னாச்சுங்கய்யா என் புள்ளைக்கு...?"

"பலமான நாய்க்கடியால் ரொம்பவும்
பிளட் லாஸாகிட்டும்மா..." எதுவாயிருந்தாலும்
இன்னும் ஒன் ஹவர்க்கு அப்புறம்? தான்
சொல்ல முடியும்

இதயம் வெடித்தது போல் உணர்ந்தவளுக்கு
கண்ணீர் கடல் பெருக்கெடுத்தது...
"கடவுளே என் புள்ளையைக் காப்பாத்து?"
பெரும் அலறோடு மயங்கிச் சரிந்தாள் கோமதி

பொது அறிவு

"மரகதத் தீவு" என்று மெச்சப்படும் நாடு
"அயர்லாந்து"

ஆன்மீகம்: புண்ணிய நதிகள்: 1.கங்கை 2.யமுனை
3.சரஸ்வதி 4.கோதாவரி 5.நர்மதா 6.சிந்து 7.காவேரி.

"மேற்கு பாரீஸ்" என்று புகழப்படும் நகரம்
சான் பிரான்சிஸ்கோ (அமெரிக்கா).

முத்து ஆனந்த்
வேலூர்

இன்று ஈ இதழ் | 70940 53241 Whatsapp

அழகிய ஆரம்பம்...
இன்று e இதழ்
indhrumail@gmail.com
70940 53241

கவிதை

அவளின் அழகு

ஒருவன் வியக்கிறான்
அவளின்'
அழகைப் பார்த்தே

மற்றொருவன்
விலகுகிறான்
அவளைப் பார்த்து

விலகுபவன்
"அவளுக்கு"
ஒப்பனை செய்தவன்...



கே.அசோகன்,
சென்னை 53

இன்று e இதழ் | இன்று e இதழ் | இன்று e இதழ்
7094053241 Whatsapp

கலர் கலர்
மொய் கவர்

20 கலர் கவர்கள் உங்கள் பெயர் ப்ரிண்ட் செய்து தரப்படும். கவர் தானாக ஒட்டிக் கொள்ளும் (Auto Paste) வசதியுடன் உள்ளது. வித்யாசமாக உங்கள் மொய் பணத்தை செலுத்தலாம்.

20 கவர்ஸ் Rs.150 + Courier Rs.50 = Rs.200
G.Pay ... 7094053241 and
send your address in Whatsapp...

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

கவிதை

-லி.நௌஷாத் கான்-
செல் : 971561093550



விமான நிலையங்களை
காணும் போதெல்லாம்
கொஞ்சம் பொறாமையாக தான்
இருக்கிறது
அவையெல்லாம்
காதல் நிலையங்களாக இருப்பதால்

தீண்டி விடும்
பார்வைத் தீயில்
தினம்,தினம்
வெந்து சாகிறது
காதல் மனது

பறக்கும் விமானங்கள் எல்லாம்
நிச்சயம்
தரை இறங்கும் என்ற
நம்பிக்கையுடனே பயணிக்கிறது
படைக்கப்பட்ட
உயிரும்
நிச்சயம் ஒருநாள்
இறைவனடி சேரும்

நனவு நெருடலென்றால்
கனவு காண
கற்றுக் கொள்

காதலை தொலைத்த பிறகு
வெள்ளைக் காகிதங்கள்
எதற்கு?
வெற்றுக் கவிதைகள்
எதற்கு?

பாழாய் போன நெஞ்சில்
தொலையாமல் இருக்கிறது?
தொலைத்து விட்ட காதல்

கஷ்டமான வாழ்க்கையிலும்
இஷ்டப் பட்டு
சிரிக்க கற்றுக்கொள்

கானல் கனவு வாழ்க்கை
கல்லறை வரை சொர்க்கம்
சுகமான சுமைகள்

சுடும் நிஜங்களை விட
சுகமான கற்பனைக் காதல்
அழகானது தான்

அந்த செல்போன்
என்ன புண்ணியம் செய்ததோ?
உன்னை செல்பி எடுக்க

கொன்று கூட
போட்டு விடு
இப்படி
கண்களால் தின்னாதே...

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

ஸ்டேட்டஸ் பக்கம்

சிற்றாறு ஆழமாக இருக்கும்போது
நீர் நிதானமாக ஓடுகிறது

வாக்குறுதியைப் பொறுத்தவரை
ஒவ்வொருவனும் கோடிஸ்வரன்...

நண்பர்களுக்கெல்லாம் நல்ல நண்பன்
ஒரு சிறந்த புத்தகம்

உன்னுடைய பிரச்சனைக்கு
நீயே தீர்வு...

இனிய நண்பர்களே...
உங்கள் நண்பருக்கு
அழகிய ஆரம்பம் இன்று - ஈ
இதழை அனுப்பி இதழின்
வளர்ச்சிக்கு உதவுங்கள்...

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

indhrumail@gmail.com

70940 53241

இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp


இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp

வ்கக்ப ஷாணர்ஸ

கக்கற்யஷ்ய
ர்ஸகாயஷ்ய
பப்ப்கக்ஷர்ஸ்க
...ர்ஸயஷர்ஸ்மி

General Knowledge

PARTS OF THE FACE



கதைகளில், கவிதைகளில் வரும் அம்சங்கள் அனைத்தும் கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல...

இன்று ஈ பதிப்பு -
29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை
வெளியிடுபவர், ஆசிரியர். வெ.கோபிநாத்
செல் 7094053241 indhrumail@gmail.com



இன்றுவை படித்ததற்கு நன்றி...